IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,ARAKKONAM, RANIPET DISTRICT.

**PAGE NO.**

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII of Criminal Procedure)

| | | | |
|---|---|---|---|
| Calender | : CC.65/2017 | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : | | |
| Sessions | : | | |
| Deposition of witness for | : Prosecution | : | PW-3 |
| | Defence | : | |
| | Court | : | |
| Name | : சௌந்தரபாண்டியன் | | |
| Father's Name | : துரைபாண்டியன் | | |
| Village | : அரக்கோணம் | | |
| Taluk | : அரக்கோணம் | | |
| Caste | : - | | |
| Calling | : அலுவலக உதவியாளர் சி.எஸ்.ஐ பள்ளி | | |
| Religion | : இந்து | | |
| Age | : 42 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 03.03.2020

ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. வழக்கின் புகார்தார் கென்னடியை தெரியும் அவர் முதல்வர் சி.எஸ்.ஐ.சென்ரல் பள்ளி. சாட்சி மணி என்னுடன் பள்ளியில் வேலை பார்ப்பவர். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர்) உள்ள கையெபாப்பங்கள் என்னுடையது இல்லை. போலிசார் திருடு போய் ஒரு வாரம் கழித்து என்னை அழைத்து விசாரித்தார்கள். திருடுபோன சமயத்தில் நான் வெளியூரில் இருந்தேன்.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருத கோரி அனுமதி கேட்கப்பட்டதன் பேரில் அனுமதி அளிக்கப்பட்டு கு.வி.

எனது சொந்த வேலையாக அரக்கோணம் டு மோதூர் செல்லும் ரோட்டில் உள்ள அம்பேத்கர்நகர் சுடுகாடு செல்லும்போது போலிசார் ஒரு நபரை விசாரணை செய்துக்கொண்டு இருந்தனர் என்றும் நான் என்ன என்று பார்த்தபோது நாகராஜ்

வயது 27 த/பெ.கணேசன், மஸ்தான் பாவா தெரு அம்பேத்கர்நகர் அரக்கோணம் என்றும் அந்த நபர் அவரது முகவரியை கூறினார் மேலும் போலிசார் அந்த நபரை விசாரணை செய்தபோது அந்த நபர் 17.04.2015 அரக்கோணம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள மதுபான கடையில் இரவு பூட்டை உடைத்து 18 மது பாட்டில்கல் திருடியதாகவும் அதன் மதிப்பு ரூபாய் 850 என்றும், அந்த பணத்தை செலவு செய்துவிட்டதாகவும் சொன்னார் என்றும், அதே நபர் மீண்டும் 05.05.2016 இரவு சி.எஸ்.ஐ.சென்ரல் மேல்நிலைப்பள்ளியில் உள்ள கணினி அறையின் பூட்டை உடைத்து அதில் இருந்த கம்யூட்டர் உதிரிபாகங்களான கம்ப்பூட்டர் கி போர்டு, மானிடர், சிபியூ, மவுஸ், பெடஸ்டல் பேன், ஆகியவையும் திருடி சென்னை மோர் மார்க்கெட்டில் விற்றுவிட்டதாக சொன்னார் என்றும் அதன் மதிப்பு ரூபாய் 15 ஆயிரம் என்றும் சொன்னார் என்றும் அதில் 5 ஆயிரம் செலவு செய்துவிட்டதாகவும் சொன்னார் என்றும், சோளிங்கர் சென்று அங்கு கோவில் உண்டியை உடைத்ததாக சொன்னார் என்றும், செலவு செய்த பணம் போக மீதம் 10 ஆயிரம் (500 ரூபாய் 20 தாள்கள்) எதிரியின் பையில் இருந்து எங்கள் முன்பு போலிசார் கைப்பற்றினார்கள் என்றும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்இபோது எதிரியை காப்பாற்றுவதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.